**சுருக்கம்**

விதிகள் – தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் 113ஆம் பிரிவு, 122ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2017ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்படாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தல் விதிகள் – அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ.4(3)]த் துறை**

**அரசாணை (நிலை) எண்.78** **நாள்: 04.05.2017**

**ஹேவிளம்பி வருடம், சித்திரை திங்கள் 21,**
**திருவள்ளுவர் ஆண்டு 2048**

**ஆணை:**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கை 04.05.2017 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் இல்லம், சென்னை–600 022.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வணிக வரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–600 009.
அரசுச் செயலாளர், வருவாய்த் துறை, சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
வேளாண்மைத் துறை, சென்னை–600 009.
அரசுச் செயலாளர்,
சட்டத் துறை, சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–600 002.
உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை–600 008.

**நகல்:**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–600 009.
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
பொதுத் (மி.க.) துறை, சென்னை–600 009.
**இருப்புகோப்பு / உதிரி நகல்.**

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர். 21/6/17

21/6/17

## <u>இணைப்பு-II</u>

## <u>அறிவிக்கை</u>

தற்போது தமிழ்நாட்டில் நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் அதிக அளவில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் எவ்வித உள்கட்டமைப்பு மற்றும் பொதுவசதிகளின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டதாலும் ஏழைகள் மற்றும் விவரம் அறியாதவர்கள் இவ்வகை மனைகளை வாங்கியுள்ளனர் என்பதாலும் இவ்வகை மனைப்பிரிவுகளை மீண்டும் ஏற்கனவே இருந்த நிலைக்கு கொண்டு செல்வதென்பது இயலாத காரியம் என்பதாலும்,

இவ்வகை மனைப்பிரிவு மற்றும் உட்பிரிவுகளில் அமைந்துள்ள மனைகளை வாங்கிய மக்களின் இன்னல்களை நீக்குவதற்கு அவ்வகை மனைகளை வரன்முறைப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது என்பதாலும்,

ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்ட மனைகள் அவை அமைந்திருக்கும் மனைப்பிரிவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள நிலையில், அவை தனித்தனியாக வரன்முறைப்படுத்தப்படின், ஒவ்வொரு மனைக்கும் உரிய கட்டமைப்பு வசதிகளை தனித்தனியே ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுந்த இன்னல் ஏற்படும் என்பதாலும், அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் உட்பிரிவுகளில் மேம்பாடுகளை அதாவது சாலையின் அகலத்தை விரிவுபடுத்தியோ, சாலைகளின் அமைப்பை (Circulation) மேம்படுத்தியோ, திறந்த வெளியிடங்கள், பொதுவசதிகள் ஆகியவற்றை இயன்ற அளவுக்கு ஏற்படுத்தி, அனுமதியற்ற மனைகள் மற்றும் அவை அமைந்திருக்கும் மனைப்பிரிவு ஆகியவற்றை வரன்முறை செய்யப்பட வேண்டும் என்பது கண்டறியப்பட்டது.

<u>எனவே, தற்போது</u>, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 35/1972) பிரிவு 113–இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டில் 2016–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு மனை அல்லது அனைத்து மனைகளும் அமையப்பெற்ற அனுமதியற்ற மனைபிரிவுகள் மற்றும் 2016–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைகளுக்கு தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 35/1972)–இல் கண்டுள்ள அனைத்து செயல்பாடுகளிலிருந்தும் விலக்களிப்பதுடன், மேற்படி சட்டப்பிரிவு 122–இன் கீழ் அவ்வகையான அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு கீழ்கண்ட விதிகளை இயற்றுகிறார்.

## <u>விதிகள்</u>

**1. <u>குருந்தலைப்பு, விண்ணப்பம் மற்றும் நடைமுறைக்கு வருதல்.—</u>**

இவ்விதிகளை தமிழ்நாடு **2017** ஆம் ஆண்டு ஒப்புதல் பெறாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்துதல் விதிகள் என்று அழைக்கப்படும்.

**2. <u>விளக்கம்.—</u>** இவ்விதிகளில் சூழ்நிலைக்கேற்ப தேவைப்படின்,—

**(1)** ‘‘சட்டம்’’ என்பது தமிழ்நாடு **1971** ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் **(**தமிழ்நாடு சட்டம் **35/1972)** என்று பொருள்படும்.

**(2)** ‘‘தகுதி வாய்ந்த அதிகாரி’’ என்பது.—

(i) **மனைப்பிரிவு அல்லது மனை உட்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறை செய்வதாயின்.—**

(அ) மாநகராட்சிகளில், ஆணையாளர்;

(ஆ) நகராட்சிகளில், ஆணையாளர்;

(இ) பேரூராட்சிகளில், செயல் அலுவலர்; மற்றும்

(ஈ) ஊராட்சிகளில், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி);

(ii) **மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதாயின்.—**

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சி பகுதிகளில், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர்.

(ஆ) ஏனைய பகுதிகளில், மனைப்பிரிவு எந்த அலுவலரின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளது என்பதைப் பொறுத்து, அந்தந்த நகர் ஊரமைப்பு துறையின் கீழ் இயங்கும் உள்ளூர் திட்டக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அல்லது மண்டல திட்டக் குழுமம் அல்லது புதுநகர் வளர்ச்சி குழுமம் அல்லது நகர் ஊரமைப்பு துறையின் வட்டார துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் ஆகியோர்.

**(3)** **“மேம்பாட்டுக் கட்டணம்’’** என்பது நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் வரம்பிற்குள் ஏற்படுத்த, விதி **10**—இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் என்று பொருள்படும்.

**(4)** **“மேம்பாடு கட்டுப்பாட்டு விதிகள்’’** என்பது சென்னைப் பெருநகர திட்டப்பகுதி அல்லாத பிறபகுதிகளுக்கான மேம்பாடு கட்டுப்பாட்டு விதிகள் (DCR) என்று பொருள்படும்.

(5) **“மேம்பாட்டுத் திட்டங்கள்’’** என்பது தொடர்புடைய திட்டப்பகுதியில் நடைமுறையில் உள்ள பெருந்திட்டங்கள், வட்டார மேம்பாட்டுத் திட்டங்கள், புதுநகர் மேம்பாட்டுத் திட்டங்கள், விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் புது நகர திட்டங்கள்.

(6) **“மேம்பாட்டு விதிமுறைகள்’’** என்பது இரண்டாம் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக அமைகின்ற சென்னைப் பெருநகர் திட்டப் பகுதிக்கான மேம்பாட்டு விதிமுறைகள் (DR) என்று பொருள்படும்.

(7) **“வழிகாட்டி மதிப்பீடு’’** என்பது 31.03.2012 வரை பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு பதிவுத் துறையால் 01.08.2007 அன்று நிர்ணயம் செய்யப்பட்ட வழிகாட்டி மதிப்பு. மேலும் 01.04.2012 அன்று அல்லது அதற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு, இந்த விதிகளுக்கான அறிவிக்கை வெளியிட்ட நாளில் நிலவும் வழிகாட்டி மதிப்பு மற்றும் விற்பனை ஆகாத மனைகளுக்கு கொள்கை அளவில் மனைப்பிரிவு வடிவமைப்பு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளில் நிலவும் பதிவுத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பு ஆகும்.

(8) **“மனைப்பிரிவு’’** என்பது,–

(i) சென்னைப் பெருநகர திட்டப்பகுதியில் 8 பிரிவுகளுக்கு மேல் மனைகளாகப் பிரிக்கப்படும் நிலப்பகுதி.

(ii) சென்னைப் பெருநகர திட்டப்பகுதியல்லாத பிற பகுதிகளில் ஒரு நிலத்தைப் புதிய சாலை மற்றும் தெருக்களுடன் கூடிய மனைகளாகப் பிரித்தல்.

(9) **“மனைப்பிரிவு கட்டமைப்பு’’** என்பது மனைப்பிரிவின் மேம்பாட்டாளர்/ சங்கத்திடம் இருந்து வரன்முறைப்படுத்துவதற்கான மனைப்பிரிவின் வரைபடத்தினை பெற்ற பின்னர் விதி 2(2)(ii)–இல் குறிப்பிட்டுள்ள உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்களால், நிலையில் உள்ள மனைப்பிரிவினை மாற்றங்கள் செய்தோ அல்லது மாற்றங்கள் இல்லாமலோ ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வடிவம் அல்லது பிரிவு 5(4)–இன் படி ஒரு மனைப்பிரிவை மேம்படுத்தும் நோக்கில் தன்னிச்சையாக தயாரிக்கப்பட்ட மனைப்பிரிவு வடிவம்.

(10) **“மனைப்பிரிவு மேம்பாட்டாளர்’’** என்பது ஒரு நிலத்தின் உரிமையாளர் அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபர், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் மற்றும் ஒரு சங்கம், உள்ளிட்டவர்களால் கூறப்பட்ட மனைப்பிரிவில் மனைகள் விற்பனை செய்யும் நோக்கத்தில் நிலத்தை மனைப்பிரிவுகளாக செய்தவர்/ஏற்படுத்தியவர்.

(11) **“உள்ளூர் அதிகாரமன்றம்’’** என்பது அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகள்.

(12) **“மனை உரிமையாளர்”** என்பது 20.10.2016 அன்றோ அல்லது அதற்கு முன்போ ஒரு மனையினை தன் பெயரில் விற்பனை ஆவணம் அல்லது உரிமை ஒப்பாவணத்துடன் பதிவு செய்தவர்.

(13) **“மனை அல்லது ஒப்புதலளிக்கப்படாத மனை”** என்பது ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவில் அல்லது மனை உட்பிரிவில் உள்ள மனை.

(14) **“வரன்முறை கட்டணம்”** என்பது ஒப்புதலளிக்கப்படாத மனை அல்லது மனை உட்பிரிவினை வரன்முறைப்படுத்த விதி 9–இல் குறிப்பிட்டுள்ளவாறு செலுத்தப்படும் கட்டணம்.

(15) **“ஒப்புதலளிக்கப்படாத மனைபிரிவினை வரன்முறை செய்தல்”** என்பது ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவு கட்டமைப்பை வரன்முறை செய்வதாகும். அத்தகைய ஒப்புதல் அளிக்கப்படாத மனைப்பிரிவு வடிவமைப்பு வரன்முறையில் மனைப்பிரிவில் அமைந்துள்ள தனிமனைகள் தாமாகவே வரன்முறைப்படுத்தப்பட்டதாக ஆகாது. ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவு கட்டமைப்பை வரன்முறை செய்த பின்னர், உரிய மனை உரிமையாளர்/அபிவிருத்தியாளர் மற்றும் (விற்கப்படாத மனைகளாயின்) தங்கள் மனை/மனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(16) **“மனை உட்பிரிவு”** என்பது,–

(i) சென்னைப் பெருநகர திட்டப்பகுதியில் ஒரு நிலப்பகுதி எட்டு எண்ணிக்கைக்கு மிகாமல் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்படுதல்.

(ii) சென்னைப் பெருநகர திட்டப்பகுதியல்லாத பிறபகுதியில் புதிய சாலைகள் மற்றும் தெருக்கள் உருவாக்காமல், இருக்கக்கூடிய சாலை அல்லது தெருவினை ஒட்டி அமைந்த நிலத்தை பிரித்தல்.

(17) **“ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது மனை உட்பிரிவு”** என்பது நகர் ஊரமைப்பு இயக்குநர் அல்லது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் முன் அனுமதியோ அல்லது இசைவோ பெறப்படாத மனைப்பிரிவு அல்லது மனை உட்பிரிவு.

(18) இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆனால் விளக்கமளிக்கப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972)–இல் குறிப்பிட்டுள்ள இதே சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கான விளக்கத்தைக் கொள்ள வேண்டும்.

3. **ஒப்புதல் பெறாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைப் படுத்துவதற்கான கால வரம்பு.–** 20.10.2016 அன்றுள்ளவாறாக பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தின் மூலம் விற்கப்பட்ட பகுதி அல்லது முழு எண்ணிக்கையிலான மனைகளைக் கொண்ட ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவுகளில் மட்டுமே இத்தகைய விதிகளின் கீழ் வரன்முறை செய்ய கருதப்படும். அதைப் போலவே ஒரு மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாத மனைகள் உட்பட அனைத்து மனைகளும் அம்மனைப்பிரிவில் ஏதேனும் ஒரு பகுதி மனைகள் 20.10.2016க்கு முன்பு

விற்பனை செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டிருப்பின் அவ்வகை மனைகள் வரன்முறைப்படுத்த தகுதி வாய்ந்தவை. ஒரு உட்பிரிவில் உள்ள தனிமனை, **20.10.2016** அன்றுள்ளவாறாக விற்பனை ஆவணம் அல்லது உரிமை ஒப்பாவணம் மூலம் பதிவு செய்யப்பட்டிருப்பின், அவையும் வரன்முறைப்படுத்த தகுதியுடையவை. சம்பந்தப்பட்ட மனை உரிமையாளர் அல்லது மனைப்பிரிவு மேம்பாட்டாளர், விற்கப்பட்ட மனைகளுக்கான சான்றாக விற்பனை ஆவணம் அல்லது உரிமை ஒப்பாவண நகலை அளிக்கவேண்டும். விற்பனை ஒப்பந்த பத்திரம் அல்லது பொது அதிகாரப் பத்திரம் ஆகியவை மனை விற்கப்பட்டதற்கான ஒரு சான்றாக கருதப்படமாட்டாது.

**4.** **<u>ஒப்புதல் பெறாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்த கட்டுப்பாடுகள்.—</u>**

**(1)** வாய்க்கால், கால்வாய், ஏரி, குளம், ஆறு போன்ற பொது நீர் நிலைப் பகுதியில் பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அமைந்த மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைசெய்ய தகுதியற்றவை.

**(2)** அரசு புறம்போக்கு நிலங்களில் பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அமைந்த மனைகள் அல்லது மனைப்பிரிவுகள் வரன்முறைசெய்ய தகுதியற்றவை.

**(3)** எந்த ஒரு ஒப்புதலளிக்கப்பட்ட மனைபிரிவு அல்லது மனை உட்பிரிவுகளில் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலப்பகுதி, பூங்கா அல்லது விளையாட்டு களங்களாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் அமைந்த மனை அல்லது மனைப்பிரிவு, வரன்முறை செய்ய கருதப்படமாட்டாது.

**(4)** காலிமனை அதனை சுற்றியுள்ள நிலங்களுக்கு வேறு அணுகுபாதை வழியில்லாத நிலையில் அதற்கான வழியினை அடைக்கும்படி இருந்தால் அத்தகைய மனை வரன்முறை செய்வதற்கு தகுதியற்றவையாகும்.

**(5)** ஒரு மேம்பாட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் நிலங்களில் அமைந்துள்ளதுமாகிய முழுமையான அல்லது ஒரு பிரிவாக உள்ளதும் எந்த ஒரு மனை அல்லது மனைப்பிரிவு பகுதி ஒழுங்கமைப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதும் உத்தேச சாலைப் பகுதி அல்லது தெருப்பகுதி அல்லது இருப்புப் பாதையாக மனைப்பிரிவு வரன்முறை செய்ய தகுதியற்றவையாகும்.

**(6)** பொதுசாலைக்கு அல்லது தெரு அல்லது ஏதேனும் பிற நிலத்தில் ஆக்கிரமிப்புடன் கூடியதும், அது குறித்து விண்ணப்பதாரர் உடைமை உரிமையை பெற்றிராததுமான எந்தவொரு மனை மற்றும் உரிமையில்லாத நிலங்கள் மற்றும் ரத்து செய்யப்பட்ட தமிழ்நாடு நகர நிலங்கள் (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் **1978**—ன்

(தமிழ்நாடு சட்டம் 24/1978) கீழ் பாதிக்கப்பட்ட நிலங்கள் எவையும் வரன்முறை செய்வதற்கு பரிசீலிக்கப்பட மாட்டது.

(7) கோபுர மின் கம்பிகள் உட்பட உயர்அழுத்த மற்றும் அதிக உயர்அழுத்த மின் கம்பிகளின் கீழ் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அமைந்த மனை அல்லது மனைப்பிரிவு வரன்முறை படுத்தப்படக் கூடாது.

5. <u>வரன்முறை செய்வதற்கான கட்டாய விண்ணப்பம்.—</u>

(1) விதி 3—இன் கீழ் தகுதி வாய்ந்த அனைத்து தனி மனை உரிமையாளர்கள் மற்றும் மனைப்பிரிவு மேம்பாட்டாளர்கள் படிவம்—I-ல் உரிய அலுவலருக்கு இந்த விதிகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 6 மாதங்களுக்குள் இணையதளத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்ட படிவத்துடன் சுயமதிப்பீடு செய்து உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதற்கான சான்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும். தகுதி வாய்ந்த அலுவலர் அந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்து இணையதள வழியாக வரன்முறை செய்ததற்கான ஆணைகளை வெளியிடுவார்.

மேலும் மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு உரிய அலுவலர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னரே, தனிமனை வரன்முறைப்படுத்தக்கோரும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறே ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள அனைத்து தனிப்பட்ட மனை உரிமையாளர்கள், மனைப்பிரிவின் வரைபடத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) அனுமதி பெறாத மனைப்பிரிவில், மொத்த எண்ணிக்கையிலான மனைகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக மனைகள் வரம்பு நிலை நாளுக்கு முன்னர் விற்கப்பட்டிருப்பின், ஒப்புதலளிக்கப்படாத அம்மனைப்பிரிவை வரன்முறைப்படுத்த, மனைப்பிரிவு மேம்பாட்டாளர் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் மற்றும் மனை உடையோர் சங்கம், மனைப்பிரிவு வரன்முறைக்கோரி விண்ணப்பிக்கலாம்.

(3) இந்த விதிகளுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு 15 நாட்களுக்குள், விதி 2(2)(ii)—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர்கள், விதி 2(2)(i)—இல் குறிப்பிட்ட தகுதிவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அவர்கள் அதிகார எல்லைக்குள் உருவாக்கப்பட ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவுகளின் சான்றளிக்கப்பட்ட பட்டியலை, அவை அமைந்திருக்கும் நேர்விற்கேற்ப, மனைப்பிரிவு மற்றும் அதன் பரப்பளவை உள்ளடக்கிய வருவாய் கிராமத்தின் பெயர், நில அளவை எண்கள் அல்லது வார்டு எண்கள், நகர நில அளவை எண்கள், உள்ளாட்சி அமைப்பின் பெயர் ஆகிய விவரங்களுடன் கேட்டுப்பெற வேண்டும்.

(4) விதி 2(2)(ii)–இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த அலுவலர்கள் விதி 2(2)(i)–இல் உள்ள உரிய அலுவலர்கள் அளித்த ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவு பட்டியலை பெற்ற பின்பு, அம்மனைப்பிரிவின் மேம்பாட்டாளர் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் / மனை உரிமையாளர்கள் சங்கத்தினர் வரன்முறை செய்ய விண்ணப்பிக்காத நிலையில், அங்கீகாரம் பெற்ற நிலஅளவையர்களின் பணியினை பயன்படுத்தி தன்னிச்சையாக மனைப்பிரிவு வடிவமைப்பை தயார் செய்து அம்மனைப் பிரிவுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(5) மனைப்பிரிவு மேம்பாட்டாளர் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் / மனை உரிமையாளர்கள் சங்கம் ஆகியோர் வரன்முறைக்காக விண்ணப்பிக்கையில், அம்மனைப்பிரிவுக்கு ஒப்புதல் பெற உரிய அலுவலரால் அறிவுறுத்தியபடி, அம்மனைப்பிரிவிலுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு கூட்டாக பொறுப்பேற்க வேண்டும். மேலும், தகுதிவாய்ந்த அலுவலரால் அறிவுறுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு இணக்கமாகவும் செயல்பட வேண்டும். இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

(6) விதி 2(2)(i)–இல் குறிப்பிடப்பட்டவாறாக ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவில் அல்லது மனைஉட்பிரிவில் உள்ள மனையினை வரன்முறைப்படுத்தக் கோரும் விண்ணபத்தினை உரிய அலுவலருக்கு அளிக்கப்பட வேண்டும்.

(7) விதி 2(2)(ii)–இல் குறிப்பிடப்பட்டவாறாக ஒப்புதலளிக்கப்படாத மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தக் கோரும் விண்ணபத்தினை உரிய அலுவலருக்கு அளிக்கப்பட வேண்டும்.

(8) நிலத்தின் மீது எந்த உரிமையும் இல்லாத யாதெரு நபர் அளிக்கும் வரன்முறைப்படுத்த கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(9) வரன்முறைப்படுத்தக் கோரும் விண்ணப்பம் கீழ்காணும் ஆவணங்களுடன் அளிக்கப்பட வேண்டும். அதாவது,

**(அ) <u>மனைப்பிரிவு அல்லது மனை உட்பிரிவில் உள்ள ஒப்புதலளிக்கப்படாத தனிமனையினை வரன்முறைப்படுத்துவதற்கு</u>**

(i) பட்டா மற்றும் புல அளவைச் சுவடியில் உள்ளபடியான மனை பரிமாணம் அல்லது மனை உட்பிரிவு மற்றும் தொடர்புடைய சாலையின் அகலம், ஆகிய விவரங்களுடன் மனைக்கு சொந்தமான நபர் மற்றும் அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர்கள் அல்லது கட்டிட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தொழில் சார்ந்த வல்லுநர்களால் கையெழுத்திடப்பட்ட தள வரைபடத்தைக் காட்டும் வரைபட நகல்கள் மூன்று.

(ii) வரன்முறை கோரும் மனையின் மனை பரிமாணம், சாலை வலையமைப்பு, சாலையின் அகலம், பொது திறந்த வெளியிடத்தின் பரிமாணம் மற்றும் பொது பயன்பாட்டு மனைகள் மற்றும் மனைப்பிரிவு அமைந்துள்ள கிராமத்தின் நில அளவை எண்கள் ஆகியவை அடங்கிய மனைப்பிரிவு வரைபடத்தின் நகல் ஒன்று.

(iii) மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதியின் சுற்றுபுறங்களில் உள்ள வளர்ச்சி மற்றும் இணைப்புச் சாலைகளை காட்டும் சுற்றுப்புற வரைபடத்தின் நகல் ஒன்று.

(iv) சுய சான்று அளிக்கப்பட்ட மனையின் விற்பனை ஆவணம் அல்லது உரிமை ஒப்பாவணம் ஒன்று.

(v) விண்ணப்பதாரர் பெயரில் பெறப்பட்ட பட்டா, நிரந்தர நில பதிவுரு அல்லது நகர நில அளவை பதிவுருக்களின் நகல் ஒன்று அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு அவை விண்ணப்பதாரர் பெயரில் பெறப்படாதிருப்பின், முந்தைய நில உரிமையாளர் பெயரில் பெறப்பட்ட அவ்வாவண நகல்கள் அளிக்கப்பட வேண்டும்.

(vi) விண்ணப்பம் செய்யப்படும் நாளிலிருந்து அதற்கு முன்னர் ஒரு வாரத்திற்குள் பதிவுத்துறையால் மனை பரிமாற்ற விவரங்களுடன் வழங்கப்பட்ட வில்லங்க சான்றிதழ்.

(vii) மனைப்பகுதி விவசாய நிலங்களில் அமையுமாயின், அம்மனைப்பிரிவு பொது நீர்பாசன வாய்கால்களை தடைசெய்யாமல் உள்ளது என்பதற்கும் வெள்ளப் பெருக்க தாக்கத்தின் அளவு ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறப்பட்ட சான்று அல்லது அதன் நிலை குறித்த அறிக்கை.

**(ஆ) <u>ஒப்புதல் பெறாத மனைப்பிரிவினை வரன்முறை செய்வதற்காக</u>**

(i) மனைகளின் பரிமாணங்கள், சாலைகளின் அமைப்பு, சாலைகளின் அகலம், பொது திறந்த வெளி இடங்களின் பரிமாணம், பொது நோக்கத்திற்கான மனைகள் மற்றும் மனைப்பிரிவு உள்ள கிராமத்தின் நிலஅளவைப் புல எண்கள் மற்றும் இவ்விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு விற்பனை செய்யப்பட்ட மனைகள் ஆகியவற்றை காட்டுகின்ற ஐந்து மனைப்பிரிவு வரைபட நகல்கள்.

(ii) மனைப்பிரிவிற்குள், மக்கள் அணுகுவதற்கான அணுகுசாலையின் அகலம் மற்றும் மனைப்பிரிவிலிருந்து 500 மீட்டர் சுற்றுவட்டாரத்தில் உள்ள, சுற்றுப்புற இடத்தின் அம்சங்கள் ஆகியவற்றை காட்டுகிற

மனைப்பிரிவை மக்கள் அணுகுவதற்கான இட அமைப்பு வரைபடத்தின் நகல் ஒன்று.

(iii) மனை விற்பனை தொடங்கப்பட்ட நாளிலிருந்து, விண்ணப்பம் செய்யப்படும் நாளுக்கு முன்னர் ஒரு வாரத்திற்கு மிகாத கால அளவில் மனையின் அனைத்து நில அளவை புல எண்களையும் உள்ளடக்கிய பதிவுத்துறையிடமிருந்து பெறப்பட்ட வில்லங்க சான்றிதழ் நகல்.

(iv) மனையின் எண், அதன் பரப்பு, பரிமாணங்கள் விற்பனை செய்யப்பட்ட நாள், ஆவணத்தின் எண், வாங்கியவரின் பெயர் போன்ற வில்லங்கச் சான்றிதழுடன் ஒத்திசைவாக உள்ள விவரங்கள் அடங்கிய சுயசான்றொப்பமிடப்பட்ட விவர அறிக்கை மற்றும் மனைப்பிரிவு மேம்பாட்டாளர் விண்ணப்பிக்கும் நிகழ்வுகளில், விற்பனை செய்யப்படாத மனைகள் குறித்த விபரங்கள்.

(v) மனைப்பிரிவு மேம்பாட்டாளர், விண்ணப்பிக்கும் நிகழ்வுகளில் மனைப்பிரிவு அமைந்த நிலத்தின் உரிமையாளர் பெயரில் உள்ள நில உரிமை ஆவணங்களின் சுய சான்றொப்பமிடப்பட்ட நகல்.

(vi) மனைப்பிரிவு முழுமையையும் உள்ளடக்கிய நில அளவைகளுக்கான தற்போதைய பட்டா, நிரந்தர நில ஆவணங்கள் (PLR) அல்லது நகர நில அளவை ஆவணங்கள் (TSLR) மற்றும் புல அளவைச் சுவடி (FMB).

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் வரன்முறைப்படுத்துதல்) சட்டம், (தமிழ்நாடு சட்டம் 24/1978) மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (நிலத்தின் உச்சவரம்பை நிர்ணயித்தல்) (தமிழ்நாடு சட்டம் 58/1961) ஆகிய விதித்துறைகளின் கீழ், சம்பந்தப்பட்ட மனைப்பிரிவுகள் இடம் பெறவில்லை என்று படிவம் II–இல் சுய உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) மனைப்பிரிவு மேம்பாட்டாளர் / சங்கம் / கழகம் ஆகியோர் விண்ணப்பிக்கும் நேர்வுகளில் படிவம்–III–ல் ரூபாய் 20–க்கு குறையாத முத்திரைத்தாளில், தகுதிவாய்ந்த அலுவலரால் குறிப்பிட்ட குறைபாடுகளை சரி செய்திட ஒப்புக்கொள்வதாகவும், தகுதிவாய்ந்த அலுவலரால் மதிப்பீடு செய்தபடி, மேம்பாட்டுக் கட்டணங்கள், வரன்முறைக் கட்டணங்கள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்துவதாகவும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். விதி 5(4)–ல் குறிப்பிடப்பட்ட தன்னிச்சையாக தயாரிக்கப்படும் வரைபட அமைப்பு நேர்வுகளில் சம்பந்தப்பட்ட மனைப்பிரிவில் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டிய இடங்களில் உள்ள மனைகள் வரன்முறைப்படுத்தப்பட மாட்டாது.

(உ) தகுதி வாய்ந்த அதிகாரியால் கோரப்படும் ஏனைய யாதொரு ஆவணங்கள்

6. <u>இவ்விதியின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் கீழ்காணும் சட்டங்களுக்கு இணங்கி இருக்க வேண்டும். அவை யாவன:-</u>

(1) 1934ஆம் ஆண்டு வானவூர்தி சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXII/1934) கீழ், சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகத்தின் ஒழுங்குமுறை விதிகள்.

(2) 1903–ஆம் ஆண்டு இராணுவப் பணிகள் சட்டத்தின் கீழ், (மத்தியச்சட்டம் 7/1903) அறிவிக்கப்பட்ட பகுதிகளை சுற்றி 100 மீட்டருக்குள் உள்ள விமானப்படை நிலையங்களின் சுற்றுப்புறத்தின் மேம்பாடுகளுக்கான இராணுவ அமைச்சகத்தின் ஒழுங்குமுறை விதிகள்.

(3) 06.01.2011ஆம் நாளிட்ட இந்திய அரசின் சிறப்பு அரசிதழின் பாகம்–II, பிரிவு 3, உட்பிரிவு (ii)–இல் அறிக்கையிடப்பட்ட 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டத்தின்கீழ் (மத்தியச்சட்டம் 29/1986) சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் கடலோர மண்டல ஒழுங்குமுறை விதிகள்.

(4) தமிழ்நாடு 1993ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சிகள் (மலைவாழ்விடங்கள்) கட்டட விதிகள்.

(5) நன்னீர் மறுசெறிவூட்டல் பகுதி தொடர்பாக உள்ள சென்னை பெருநகர திட்டப்பகுதி மேம்பாட்டு விதிகளுக்கான பின்இணைப்பு XI.

(6) செங்குன்றம் நீர் பிடிப்பு பகுதி தொடர்பாக, சென்னை பெருநகர திட்டப் பகுதி மேம்பாட்டு ஒழுங்குமுறை விதிகளுக்கான பின்இணைப்பு XII.

(7) 1959ஆம் ஆண்டு தொன்மையான நினைவுச் சின்னங்கள் மற்றும் அகழாய்வு இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டத்தின்படி (மத்தியச்சட்டம் 24/1958) மற்றும் தமிழ்நாடு 1966–ஆம் ஆண்டு தொன்மை மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், அகழாய்வு இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966)–இன் படி அறிவிக்கையிடப்பட்ட பகுதிகள்.

7. <u>வரன்முறைப்படுத்துவதற்கான வழிமுறைகள்.-</u> வரன்முறைப்படுத்தக் கோரும் வரன்முறைப்படுத்தப்படாத தனியாரின் மனை மற்றும் வரன்முறைப்படுத்தப்படாத மனைப்பிரிவின் கீழ் வரும் விதிமுறைகளுக்கு இணங்கி இருக்க வேண்டும்:-

(அ) வரன்முறைப்படுத்தக் கோரும் தனியாரின் மனைப்பிரிவு அல்லது மனையின் உட்பிரிவு, இவ்விதிகள் செயலுக்கு வரும் காலத்திற்கு முன்பு, மனுதாரருக்கு பதிவு செய்யப்பட்ட விற்பனைப்பத்திரம் மூலம்

விற்பனை செய்யப்பட்டோ அல்லது மாற்றம் செய்யப்பட்டோ இருக்க வேண்டும்.

(ஆ) வரன்முறைப்படுத்தக் கோரப்படும் மனைப்பிரிவு, சேர்ந்த நிலப்பகுதியாக இருக்க வேண்டும்.

(இ) வரன்முறைப்படுத்தக் கோரப்படும் யாதொரு மனையும், பொதுச்சாலை ஒன்று ஒட்டியுள்ளதாக அல்லது பொதுச்சாலை ஒன்றிலிருந்து மனுதாரருக்கு உரிமையுடைய வழி ஒன்றின் மூலம் அணுகத்தக்கதாக இருக்க வேண்டும்.

(ஈ) வரன்முறைப்படுத்தக் கோரப்படும் மனைப்பிரிவு, மாநகராட்சி அல்லது நகராட்சி என்னும் நேர்வில், குறைந்த அளவு **4.8** மீட்டர் அகலமுடைய பொதுச்சாலை ஒன்றிலிருந்து, மற்றும் பேரூராட்சி அல்லது கிராம ஊராட்சி என்னும் நேர்வில், குறைந்த அளவு **3.6** மீட்டர் அகலமுடைய பொதுச்சாலை ஒன்றிலிருந்து அணுகத்தக்கதாக இருக்க வேண்டும்.

(உ) **<u>தனிமனைகள்:-</u>**

(i) இவ்விதிகளின் கீழிருக்கும் **2(2)(i)–**விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிய அதிகாரியால், கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும், மனைப்பிரிவு வடிவமைப்பில் அமைந்துள்ள அனைத்து மனைகளும் வரன்முறைப்படுத்துவதற்குத் தகுதியுடையனவாகும்.

(ii) ஒரு உட்பிரிவில் இருக்கும் தனிமனை, அப்பிரிவிலிருக்கும் எஞ்சியுள்ள மனைகளில் கட்டட ஒழுங்குமுறைகள் மீறப்பட்டிருப்பினும், வரன்முறைப்படுத்தப்படலாம்.

(iii) மனைப்பிரிவு ஒன்றிலிருக்கும் தனிமனையானது, கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனைப்பரிமாணங்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள சாலையின் அகலம் ஆகியவை வரையிலான அளவிற்கு மட்டுமே வரன்முறைப்படுத்தப்படும்.

(iv) கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு ஒன்றில் அமைந்திருக்கும் ஒரு மனையின் யாதொரு பகுதியும், சாலையின் அகலத்தை விரிவுபடுத்துதல் அல்லது சுற்றுப் பகுதிகளுக்கு அணுகுசாலை அமைத்தல் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் நேர்வில், பதிவு செய்யப்பட்ட கொடை ஒப்பாவணம் மூலம் தேவைப்படும் வகையில், உரிய அதிகாரியால் உள்ளாட்சி அமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும்.

**(ஊ) <u>மனைப்பிரிவிலுள்ள மனைகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு குறைவான மனைகள், வரம்பு நிலை நாளிற்கு முன்னதாக விற்கப்பட்டிருக்கும் நிலையிலிருக்கும் மனைப்பிரிவுகள்:</u>**

(i) மனைப்பிரிவிற்கான அணுகுசாலையில் அகலம் மற்றும் திட்டமில்லாப் பகுதியின் மனையை வேளாண்மைப் பயன்பாட்டிலிருந்து ஏனைய நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல் நீங்கலாக, மனைப்பிரிவானது நேர்விற்கேற்ப வளர்ச்சி விதிமுறைகள் அல்லது வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும்.

(ii) மனைப்பிரிவு ஒப்புதல் பெறுவதற்கான முறையான விண்ணப்பங்களில் வழக்கமாகப் பின்பற்றப்படும் நடைமுறைகள் இதிலும் பின்பற்றப்பட வேண்டும்.

**(எ) <u>மனைப்பிரிவிலுள்ள மனைகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி மற்றும் அதற்கு மேல் ஆனால் மூன்றில் இரு பகுதிக்குக் குறைவான மனைகள், வரம்புநிலை நாளிற்கு முன்னதாக விற்கப்பட்டிருக்கும் நிலையிலிருக்கும் மனைப்பிரிவுகள்:-</u>**

(i) மனைப்பிரிவானது, இயன்ற அளவில், நேர்விற்கேற்ப வளர்ச்சி விதிமுறைகள் அல்லது வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். மேலும், பின்பற்ற இயலாதவையான சாலையின் அகலம், நிலப் பயன்பாடு போன்றவை இவ்விதிமுறைகளிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்குத் தகுதியுடையவையாகும்.

(ii) மனைப்பிரிவு வடிவமைப்பில் விற்கப்படாத மனைகளை மாற்றி அமைப்பதன் மூலம் அம்மனைப்பிரிவின் விற்பனையை அதிகரிக்கலாம்.

(iii) விற்கப்படாத மனைகளை ஒருங்கிணைத்து அல்லது மாற்றியமைத்து, திறந்தவெளியிடங்கள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மனையைத் திறந்தவெளியிடமாக மாற்ற இயலாத நேர்வுகளில் மட்டும், அவை போன்ற இடங்களில் இணையான மதிப்பீட்டுத் தொகை வசூலிக்கப்படலாம்.

(iv) திட்டமிடப்பட்ட பகுதிகள் நீங்கலாக, வேளாண்மை நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளின் ஒரு பகுதியில் அல்லது முழு மனைப்பிரிவில், மனைப்பிரிவு வரைபடத்திற்கான கொள்கையளவில் ஒப்புதல் வழங்குவது குறித்து முடிவு செய்தவற்காக, ஏதேனும் பொது நீர்பாசன வாய்க்கால் தடைசெய்யப்பட்டிருத்தல் அல்லது ஆக்கிரமிக்கப்பட்டிருத்தல் அல்லது மனைப்பிரிவை ஏற்படுத்துவதற்காக நீக்கப்பட்டிருத்தல்

மற்றும் வெள்ளப் பெருக்குத் தாக்கத்தின் அளவு ஆகியவை குறித்து உரிய அதிகாரியால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(v) மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் இன்னும் விற்கப்படாத மனைகளைக் கொண்டிருக்கும் மனைப்பிரிவுகளில், மேல்நிலை குடிநீர்த் தொட்டி, மின்மாற்றி போன்ற பொது வசதிகளை ஏற்படுத்துவதற்காக, உள்ளூர் திட்டமிடல் அதிகாரியால் கோரப்படும் அளவில் குறைந்த அளவு இடங்கள், வீடுகட்டித் தருபவரால் வழங்கப்பட வேண்டும்.

**(ஏ) <u>மனைப்பிரிவிலுள்ள மனைகளின் மொத்த எண்ணிக்கையில் மனைகளில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகமான மனைகள், வரம்புநிலை நாளிற்கு முன்னதாக விற்கப்பட்டிருக்கும் நிலையிலிருக்கும் மனைப்பிரிவுகள்:-</u>**

(i) 4 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீங்கலாக, மனைப்பிரிவானது 'அவையவை அங்கங்கே' இருக்கும் நிலையில் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

(ii) வீடுகட்டித் தருபவர் அல்லது அனைத்து மனைகளில் உரிமையாளர்கள், தடையில்லாச் சான்றிதழ் வழங்கும் நேர்வில், விற்கப்படாத மனைகள் இயன்ற அளவில், ஒருங்கிணைத்து அல்லது மாற்றியமைத்து, திறந்தவெளியிடங்கள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மனையை திறந்தவெளியிடத்திற்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நேர்வுகளில், குறையிடங்களுக்காக, இணையான மதிப்பீட்டுத் தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும்.

(iii) திட்டமிடப்பட்ட பகுதிகள் நீங்கலாக, வேளாண்மை நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளின் ஒரு பகுதியில் அல்லது முழு மனைப்பிரிவில், மனைப்பிரிவு வரைபடத்திற்கான கொள்கையளவில் ஒப்புதல் வழங்குவது குறித்து முடிவு செய்வதற்காக, ஏதேனும் பொது நீர்பாசன வாய்க்கால் தடைசெய்யப்பட்டிருத்தல் அல்லது ஆக்கிரமிக்கப்பட்டிருத்தல் அல்லது மனைப்பிரிவை ஏற்படுத்துவதற்காக நீக்கப்பட்டிருத்தல் மற்றும் வெள்ளப்பெருக்குத் தாக்கத்தின் அளவு ஆகியவை குறித்து உரிய அதிகாரியால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(iv) மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் இன்னும் விற்கப்படாத மனைகளைக் கொண்டிருக்கும் மனைப்பிரிவுகளில், மேல்நிலை குடிநீர்த் தொட்டி, மின்மாற்றி போன்ற பொது வசதிகளை ஏற்படுத்துவதற்காக, உள்ளூர் திட்டமிடல் அதிகாரியால் கோரப்படும் அளவில் குறைந்த அளவு இடங்கள், வீடுகட்டித் தருபவரால் வழங்கப்பட வேண்டும்.

8. **<u>வரன்முறைப்படுத்தப்படுவதால் ஏற்படும் பயன்கள்.–</u>** தொடர்புடைய அபிவிருத்தி திட்டத்தில் அமையும் நிலங்கள் எவ்வித நிலப்பயன்பாட்டு மண்டலத்தில் அமையப் பெற்றிருந்தாலும் இவ்விதிகளின் கீழ் வரன்முறைப்படுத்தப்படும் மனைகள் குடியிருப்பு பயன்பாட்டிற்கென வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படும்.

9. **<u>வரன்முறைக் கட்டணங்கள்.–</u>** இவ்விதிகளின் கீழ் மனை அல்லது மனைப்பிரிவு ஆகிய ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே வரன்முறைக் கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பின்வருமாறு விதிக்கப்படும்:–

வரன்முறைக் கட்டணமானது மனைப்பகுதி ஒன்றின் சதுரமீட்டர் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்டு கீழ்கண்டவாறு வசூலிக்கப்படும்:-

| | | | |
|---|---|---|---|
| (i) | மாநகராட்சிப் பகுதிகள் | – | ரூ.100/– ச.மீ. |
| (ii) | நகராட்சிப் பகுதிகள் | – | ரூ.60/– ச.மீ. |
| (iii) | பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சி பகுதிகள் | – | ரூ.30/– ச.மீ. |

மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

10. **<u>வளர்ச்சிக் கட்டண விதிப்பு.–</u>** வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய மனை அல்லது மனைப்பிரிவுக்கு உண்டான வளர்ச்சிக் கட்டணம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வசூலிக்கப்பட வேண்டும்.

வளர்ச்சிக் கட்டணம் மனைப்பகுதியின் சதுரமீட்டர் ஒன்றுக்கு:-

| | | | |
|---|---|---|---|
| (i) | மாநகராட்சிப் பகுதிகள் | – | ரூ.600/– ச.மீ. |
| (ii) | சிறப்பு மற்றும் தேர்வுநிலை நகராட்சிப் பகுதிகள் | – | ரூ.350/– ச.மீ. |
| (iii) | நிலை I மற்றும் II நகராட்சிப் பகுதிகள், மற்றும் | – | ரூ.250/– ச.மீ. |
| (iv) | பேரூராட்சி | – | ரூ.150/– ச.மீ. |
| (v) | கிராம பஞ்சாயத்து பகுதி | – | ரூ.100/– ச.மீ. |

மேற்குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

11. **<u>திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதிக்கான கட்டணங்கள்.–</u>** (1) உட்கோட்டத்திலுள்ள மனையினை வரன்முறைப்படுத்தப்படுவதற்காக, வளர்ச்சி விதிகள்/வளர்ச்சிக்கட்டுப்பாட்டு விதிகளின்படி திறந்தவெளி ஒதுக்கீட்டுப் பகுதி தேவையானதாகும். வரன்முறைப்படுத்தலுக்காக விண்ணப்பிக்கப்பட்ட மனைப் பகுதியின் அளவிற்கேற்ப கணக்கிடப்பட்டு அதற்கான தொகை வசூலிக்கப்படும்.

(2) வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய மனைப்பிரிவுகளில் திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதி அமையாதிருப்பின், இத்திட்ட விதி 2(7)—ஆம் பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்ட வழிகாட்டு மதிப்பீட்டின்படி மனைப்பிரிவின் 10 விழுக்காட்டு அளவில் திறந்தவெளி பகுதிக்கான கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இருப்பினும் மனைப்பிரிவில் 10 விழுக்காடு அளவு திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதி பாதியளவு அமைந்திருப்பின், திறந்தவெளி பகுதிக்கான கட்டணம் வசூலிக்கப்படும்போது, அப்பகுதிக்கான கட்டணம் குறைத்து, அதற்கேற்றவாறு வசூலிக்கப்பட வேண்டும்.

(3) பின்பற்றப்படும் 2(2)(ii)—ஆம் நடைமுறைகளின் விதி படி அவ்வாறு வசூலிக்கப்பட்ட திறந்தவெளி கட்டணம் தகுதிவாய்ந்த அலுவலருக்கான கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

12. **<u>கூர்ந்தாய்வுக் கட்டணம்.—</u>** கூர்ந்தாய்வுக் கட்டணமாக ஒரு மனைக்கு ரூ.500/— வீதம், விதி 2(2)(ii)—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலரால் வசூலிக்கப்படும்.

13. **<u>ஐயம் தீர்த்தல்.—</u>** இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரன்முறைப்படுத்தப்படும் கட்டணங்கள், திறந்தவெளி ஒதுக்கீட்டு கட்டணங்கள் மற்றும் வளர்ச்சிக் கட்டணங்கள் ஆகியவை தொடர்புடைய சட்டங்களின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் / நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் உள்ளாட்சி அமைப்பினால் பொதுவாக விதிக்கப்படும் கட்டணங்களாகும். ஆகையினால், மனை வரன்முறைப்படுத்துவதற்காக, விதிகளில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களைத் தவிர, வேறு யாதொரு கட்டணங்களையும் வசூலிக்கக்கூடாது.

14. **<u>மனுக்கள் பரிசீலனை செய்தல்.—</u>** (1) 2(2)(i)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர், ஒரு பிரிவில் அமைந்துள்ள மனையை வரன்முறைப்படுத்த கோரி, பெற்ற மனுவின் பேரில், ஆய்வு மேற்கொண்டு, அணுகுசாலையின் நிலையை உறுதி செய்து, விதிகளின்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து, தேவைப்படின், கூடுதல் விவரங்கள் மற்றும் விளக்கங்களை பெற்று அம்மனையை வரன்முறைப்படுத்துவது பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். மனையை வரன்முறைப்படுத்துவதற்கு முன், தகுதிவாய்ந்த அதிகாரி அம்மனையானது உட்பிரிவின் பகுதியே, மனைப்பிரிவு அல்ல என்பதற்கான சான்றினை அளிக்க வேண்டும். பின்பு அம்மனை வரன்முறைப்படுத்துவதற்கு உகந்ததாயிருப்பின், வரன்முறை கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு கட்டணங்களை செலுத்த வேண்டி, கேட்பு தொகை அறிவிப்பு அளிக்கவண்டும். அக்கட்டணங்களை வசூலித்தபின், தகுதிவாய்ந்த அலுவலர் வரன்முறைப்படுத்தியதற்கான ஆணையை, மனை வரன்முறைப்படுத்தப் பட்டதற்கான உரிய வரைபட நகலுடன் அளிக்க வேண்டும்.

**(2)** 2(2)(i)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர், ஒரு மனைப்பிரிவில் அமைந்துள்ள தனிமனையை வரன்முறைப்படுத்தக்கோரும் விண்ணப்பத்தினை 2(2)(ii)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரி அம்மனை அமைந்திருக்கும் மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்பே, பரிசீலிக்க வேண்டும்.

**(3)** 2(2)(i)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர், மனைப்பிரிவை வரன்முறைப்படுத்துவதற்கான விண்ணப்பத்தினை பெற்றதன்பேரில், ஆய்வு மேற்கொண்டு, இவ்விதிகளின்படி, விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தேவைப்படின் பரிசீலனை செய்ய தொடர்புடைய கூடுதல் விவரங்கள் மற்றும் விளக்கங்கள் பெற்று, அம்மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும்.

தகுதிவாய்ந்த அலுவலரால் கோரப்பட்ட கூடுதல் விவரங்கள் மற்றும் விளக்கங்களை தொடர்பு கொண்ட 60 தினங்களுக்குள் விண்ணப்பதாரர் அளிக்காவிடில், சம்பந்தப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**(4)** 2(2)(ii)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலரிடம் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டிருக்கும் நேர்வில், திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் சாலைகளை ஒப்படைக்கப்பட வேண்டி இருந்தால் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் அவை உட்பட 2(2)(ii)—ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் மனநிறைவு அடையும் வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

**(5)** விதி 2(2)(i)—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து சம்பந்தப்பட்ட மனைப்பிரிவில் மனுதாரரால் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது மற்றும் திறந்தவெளியிடங்கள் மற்றும் சாலைப்பகுதிகள் உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரங்களை பெற்றபின், அம்மனைப்பிரிவு, இவ்விதிகளின்படி இருக்கும்நேர்வில், விதி 2(2)(ii)—இல் கண்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர், அம்மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கையளவிலான ஒப்புதலை அளிப்பதுடன் அதன் வரைபட நகலை விதி 2(2)(i)—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**(6)** விதி எண்.2(2)(ii)—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டவுடன், விதி 2(2)(i)—இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த அலுவலர் விண்ணப்பிக்கப்பட்ட தனிமனைகளை வரன்முறைப்படுத்தும் போது சம்பந்தப்பட்ட தனிமனை, கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்தில் காணப்படும் சம்பந்தப்பட்ட மனையின் அளவுகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள

சாலையின் அளவோடு ஒத்திருப்பதை உறுதிசெய்தபின் வரன்முறைக்கட்டணம், மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் திறந்தவெளி கட்டணங்களுக்கான கேட்புத்தொகை அறிவிப்பு அளிக்கவேண்டும்.

(7) மனுதாரரால் கேட்புத்தொகை செலுத்தப்பட்ட பின்பு விதி **2(2)(i)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் அம்மனையை வரன்முறைப்படுத்தியதற்கான ஆணையை மனை வரன்முறைப் படுத்தப்பட்டதற்கான வரைபட நகலுடன் மனுதாரருக்கு அளிக்க வேண்டும்.

**(8)**(a) விதி **5(4)–இல்** கண்டுள்ளவாறு தன்னிச்சையாக தயாரிக்கப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பைப் பொறுத்த நேர்வில் விதி **2(2)(ii)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் விதி **7–இல்** கண்டுள்ள வழிகாட்டி குறிப்புகளுக்கு இணங்க மனைப்பிரிவை பரிசீலனை செய்து, தேவையெனில் உரிய மாறுதல்கள் மேற்கொள்ளவும், ஆய்வு கட்டணம், வரன்முறைக் கட்டணம், மேம்பாட்டுக் கட்டணம், திறந்தவெளி ஒதுக்கீடு கட்டணம் மற்றும் மனைப்பிரிவு முழுமைக்குமான மேம்பாட்டுக் கட்டணங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். அவ்வகைக் கட்டணங்கள் அம்மனைப் பிரிவிலுள்ள ஒவ்வொரு மனை உரிமையாளரிடமிருந்து மனைபரப்பளவிற்கு ஏற்றவாறு வீதாச்சார அடிப்படையில் வசூலிக்க ஏதுவாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(b) விதி **2(2)(ii)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் மனைப்பிரிவு வரைபடத்தில் உரிய மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொண்டு அம்மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கையளவிலான தனது ஒப்புதலை வழங்க வேண்டும். பின்பு அவ்வாறு கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் மற்றும் மனை உரிமையாளர்களிடமிருந்து வீதாச்சார அளவில் வசூலிக்கப்பட வேண்டிய கட்டண விவரங்களுடன் விதி **2(2)(i)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

(c) கொள்கை அளவில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் குறித்த தகவல்கள் பெறப்பட்டவுடன் விதி **2(2)(i)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் சம்பந்தப்பட்ட மனை உரிமையாளரின் மனை உரிமையை உறுதிசெய்தபின்பு உரிய கட்டணங்களை வசூலித்து அம்மனையை வரன்முறைப்படுத்தி அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதலளிக்க வேண்டும். விதி **2(2)(i)–இல்** குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் அம்மனைப்பிரிவில் மனைப்பிரிவு மற்றும் மனை உரிமையாளர்கள் சார்பாக உரிய மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதுடன், உள்ளாட்சி அமைப்புகளின் சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் சாலைப்பகுதிகளை

பராமரிக்க ஏதுவாக அவற்றை தன்னிச்சையாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**(9)** ஒப்புதல் அளிக்கப்படாத மனைப்பிரிவு வடிவமைப்பை முறைப்படுத்துவதால் அந்த மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் தாமாகவே வரன்முறைப் படுத்தப்பட்டதாக பொருள்படாது. மனையின் உரிமையாளர்/மேம்பாட்டாளர், மனைப்பிரிவு வடிவமைப்பு முறைப்படுத்தப்பட்ட பின்னர் அவருடைய மனையை/ மனைகளை முறைப்படுத்துவதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**(10)** தொகைகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துவதற்கான கேட்பு அறிவிப்பு பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் கேட்பு அறிவிப்பின்படி, கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து **30** நாட்களுக்குள் அனைத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்களை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் காலதாமத காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு **6** சதவிகித வட்டி வசூலிக்கப்படும். மேற்சொன்ன கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து **90** நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**(11)** இவ்விதிகளுக்கு இணங்க இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் தகுதிவாய்ந்த அலுவலரால் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல் விண்ணப்பங்களை நிராகரித்து ஆணை வெளியிடப்படும்.

**(12)** விதி **2(2)(i)**—இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் திறந்தவெளி பகுதி மற்றும் சாலைகளை தானமாக உள்ளாட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து உரிய மாற்றங்களை வருவாய் ஆவணங்களில் ஏற்படுத்த ஏதுவாக தானப்பத்திரம் மற்றும் கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தை சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**15.** **வரன்முறைப்படுத்தாமல் இருப்பதன் விளைவுகள்.**— ஒப்புதல் பெறப்படாத மனை மற்றும் மனைப்பிரிவுகள் இவ்விதிகளின் கீழ் வரன்முறைப் படுத்தப்படாத நிலையில்,—

(a) ஒப்புதல் பெறப்படாத மனை மற்றும் மனைப்பிரிவுக்கு மின்சாரம், தண்ணீர், வடிகால் மற்றும் கழிவுநீர் போக்கும் இணைப்புகள் நீட்டித்து வழங்கப்படமாட்டாது.

(b) ஒப்புதல் பெறப்படாத மனை மற்றும் மனைப்பிரிவு, பதிவுத்துறை மூலமாக இந்திய பதிவுச்சட்டம், **1908** (மத்திய அரசுச் சட்டம் **9/1908**)—இன் கீழ் பதிவு செய்யப்படமாட்டாது.

(c) ஒப்புதல் பெறப்படாத மனை மற்றும் மனைப்பிரிவில் அமையப்பெறும் கட்டிடங்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களால் கட்டிட அனுமதி வழங்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட விளைவுகளை நடைமுறைபடுத்த உரிய துறைகள் தொடர்புடைய சட்டத்திற்கு உரிய சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

16. **<u>விதிக்கப்படும் மேம்பாட்டுக் கட்டணங்களை தனிக்கணக்கில் வைத்திருத்தல்.–</u>** சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் மேம்பாட்டுக் கட்டணங்கள் ஒரு தனிக் கணக்கில் வைத்து உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்படுத்தப்படும் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கும், மத்திய அரசு திட்டங்களுக்கான மாநில அரசின் பங்களிப்பை அளிக்கவும் பயன்படுத்த வேண்டும்.

17. **<u>மேல்முறையீடு.–</u>** சென்னைப் பெருநகர் திட்டப்பகுதியாயின் சம்பந்தப்பட்ட உரிய அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருக்குள்ளான யாதொரு நபரும் தனது மேல்முறையீட்டை அரசுக்கும், பிற பகுதிகளாயின் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவ்வாணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள் அளிக்கலாம்.

ஆனால், மேல்முறையீட்டாளரால் தங்கள் மேல் முறையீட்டு மனுவை உரிய காலத்திற்குள் அளிக்காததற்கு போதிய காரணங்கள் உள்ளன என்று அரசோ அல்லது நகர் ஊரமைப்பு இயக்குநர் தெளிவு செய்கின்ற நேர்வில், அம்மேல்முறையீட்டை 30 நாட்கள் முடிவடைந்த பின்பும் அனுமதிக்கலாம்.

18. **<u>சீராய்வு.–</u>** சென்னைப் பெருநகர் திட்டப்பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் நகர் ஊரமைப்பு இயக்குநர் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரேனும், தங்களது சீராய்வு மனுவினை, அவ்வாணை பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் அரசுக்கு அளிக்கலாம்.

ஆனாலும், சீராய்வு மனுதாரர் தனது மனுவை உரிய காலத்திற்குள் அளிக்காததற்கு போதிய காரணங்கள் உள்ளன என்று அரசு ஐயமறத் தெளிந்தால், அரசு அச்சீராய்வு மனுவை 30 நாட்களுக்கு பிறகும் அனுமதிக்கலாம்.

19. **<u>மறுஆய்வு.–</u>** சென்னைப் பெருநகர் திட்டப்பகுதியில் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரேனும், அவ்வாணை பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அரசுக்கு புதிய காரணங்களை விளக்கி ஆணையை மறு ஆய்வு செய்ய மனு அளிக்கலாம். இருப்பினும், மறுஆய்வு மனுவை மனுதாரர் உரிய காலத்திற்குள் அளிக்காததற்கு போதிய காரணங்கள் உள்ளன என்று ஐயமறத் தெரிந்தால், அம்மறுஆய்வு மனுவை 30 நாட்களுக்குப் பிறகும் அனுமதிக்கலாம்.

20. **<u>பொறுப்பு துறப்பு.–</u>** இவ்விதிகளின் கீழ் வரைமுறைப்படுத்தப்பட்ட மனைகளில் அமைந்துள்ள கட்டடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக, கருதப்படக்கூடாது. மேலும், அது சம்பந்தப்பட்ட மனுதாரர் அல்லது இடத்தின் உரிமையாளருக்கு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்பு

சட்டம், **1971**, பிரிவு **56** மற்றும் **57**–இன் கீழ் அவ்வகை கட்டிடங்கள் மீது எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் நீர்த்துப் போவதாக அமையும் வகையிலான உரிமையை அளிக்காது.

**21.** **<u>தற்காலிக ஏற்பாடுகள்.–</u>** **(1)** நேர்விற்கேற்ப, எந்த ஒரு குழு அல்லது அரசிடம் நிலுவையிலுள்ள மற்றும் இவ்விதிகளின் கீழ் வரன்முறைப் படுத்தக்கூடியதாக இருக்கும் மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தையும் பொறுத்த நேர்வில் அக்குழு அல்லது அரசு அவ்வகை மேல்முறையீட்டு மனுக்களை அல்லது விண்ணப்பங்களை தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு மாற்ற வேண்டும்; தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்விதிகளின் கீழ் இத்தகைய நேர்வுகள் குறித்து நடவடிக்கை எடுப்பார்.

**(2)** இவ்விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட பகுதிகளில் நடைமுறையிலுள்ள தொடர்புடைய விதிகளின் கீழ் நிராகரிக்கபட்ட அல்லது மறுக்கப்பட்ட விண்ணப்பத்தை அளித்த விண்ணப்பதாரர், இவ்விதிகளின் உரிய வழிமுறைகளை பின்பற்றி தகுதிவாய்ந்த அலுவலருக்கு புதிதாக விண்ணப்பிக்கலாம்.

தர்மேந்திர பிரதாப் யாதவ்
அரசுச் செயலாளர்

// தமிழாக்கம்//

பிரிவு அலுவலர். 21/6/17

21/6/17